ARYA DHARMAM
TAMIL WEEKLY.

REGD No. M. 2913

# ஆர்யதர்மம்

சந்தா விபரம்.

[தபால் சிலவுள்பட]

| | | |
|---|---|---|
| ஜீவிய சந்தா | ... | ரூ. 50 |
| ஒரு வருஷ சந்தா | ... | ரூ. 3 |
| ஆறுமாத சந்தா | ... | ரூ. 1½ |

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை | ரூ. 20 |
| அரைப்பக்கம் ஒரு தடவை | ரூ. 12 |
| ஒருபத்தி ஒரு தடவை | ரூ. 8 |
| இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை | அணு 8 |

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் பிரமாதி-வரு மாசி-மீ 24உ 1940 வரு மார்ச்சுமீ 7உ | ல-10

## வாரக்குறிப்பு

(ஸ்ரீ வத்ஸ. வே. ஸோ. சர்மா)

இங்கும் வேலைநிறுத்தமா? நாகையில் ரயில் தொழிலாளர்கள் ஒன்று கூடி தங்கள் குறைகளை அகற்றுவிட்டால் வேலை நிறுத்தம் செய்வதாகக் கூறுகின்றனர். கட்டணம் அதிகமாகி பிரயாணிகள் தவிக்கும் போது இதுவும் சேர்ந்தால் விசேஷந்தான்!

சிறையில் தர்மம் கற்பிக்க! [illegible] சிறைகள் சீர்திருத்தத்தைப் பற்றி ஓர் மகாநாடு கூடிற்று. வெறும் பேச்சும் தீர்மானங்களும் அபரிமிதம்! களவு கொலை பொய் இவை மஹாபாபகரமானதென்பதை சிறையாளர் மனதில் ஏற்றினால் பாபத்திற்கஞ்சி அத்திய தொழிலை விடுவதுபோல் வேறெதனுலும் விடமாட்டார்!!

இலங்கையில் நெருக்கடி!! அரசியல் சீர்திருத்தத்தில் சில குறைபாடுகளை கண்டு மந்திரிகள் ராஜீநாமா செய்து ஓர் அச்சத்தை அங்கும் உண்டுபண்ணியிருக்கின்றனர். கவர்னர் மிக ஸாமர்த்யமாக நடக்க முயல்கிறார்.

இரண்டாவதடி!! சென்னை ஆலோசக அரசாங்கம் தேசீய மந்திரி கொள்கையை பின்பற்றுவதாகக் கூறிக்கொண்டு மந்திரி வேலையை ஒன்றொன்றாக திருத்துகிறது! கட்டாய ஹிந்தியை எடுத்தது முதலடி! வார்தா பயிற்சிசாலையை அகற்றியது இரண்டாவது!! ஆலயப்ரவேச சட்டத்தை அகற்றுவது அவசியமும் அறிவுள்ளதுமாகும் !!

முற்ற விடக் கூடாது!! கார்யக்கமிட்டி வங்கஸபையை ஸஸ்பெண்ட்செய்தது மூலம் மேல் மேலும் சண்டை வளர்கிறது !! எப்படியாவது ஸமாதானம் செய்திருந்தால் மிக நலம்!! பல பலஹீனமேற்பட்டகாலத்தில் இது அழகலல்

தானே நன்கு செய்யலாமே! திருப்பணந்தாள் மடம் அண்ணாமலை ஸர்வகலாசாலைக்கு 75 ஆயிரம் பொறுமான பூமியை விட்டு 500 ரூ—ஓர் பரிசு மிகுதி புத்தக பிரசுரமும் செய்யச் சொல்லுகிறது! இவர்கள் கூட பண்டைய வழியை மறந்தனரா?

அவச்யமான தேவை!! நாளுக்கு நாள் படக்காக்ஷிகள் விரைவாக வளருகின்றன. அவ்வளவு விரைவில் அவைவீழ்ந்து விடுமென்று சிறது பொருமையுடனிருக்க முடியாமல் அவ்வளவு கேவலமான காக்ஷிகள் வெளிவருகின்றன!! விபரீதகதைகளை எழுதுவது ஸச்சரிதங்களைப் பாழாக்குவது!! புராணக் கதை என்று கூறி ஏமாற்றுவது!! என மூவ்வகையில் கடைசிமுறை முழுமோசமாகி வருகிறது அதைப் பார்பவர் சங்கம் ஒன்று தோன்றி இத்தகைய படங்களை சிறந்த முறையில் கண்டித்து வெளியே வராதபடியோ பொதுமக்கள் போகாதபடியோ செய்யவேண்டும்.

## விற்பனை வரிக்குச் சிறிது விமோசனம்

### பாதியாக்கப் பட்டது

### சென்னை பட்ஜட்

சென்னை கவர்ன்மெண்டின் புதிய வருஷத்திய வரவுசெலவு திட்டத்தை கவர்னரே தயாரித்து வெளியிட்டருக்கிறார். ஏற்கனவே அறிவித்தபடி நிலவரி வஜாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருகிறது. புதிய விடங்களில் மது விலக்கு திட்டதை அமுலுக்குக் கொண்டு வரமாட்டார்களாம். விற்பனை வரியை பாதியாகக் குறைத்து விட்டார்கள். புகையிலை வரியிலும் முக்ய மாறுதல் செய்யப்படும். 50லக்ஷம் ரூபாய் உபரித் தொகை இருக்கும். புதிய வரி எதுவுமில்லை.

## ஸமரஸ எதிர்ப்பு மஹாநாடு

### ராம்காரில் கூட்ட ஏற்பாடு

பிரிட்டிஷ் சர்க்காருடன் ஸமரஸம் செய்துகொண்டு மீண்டும் மந்திரி பதவிக்குப் போக சூழ்ச்சி செய்யும் காந்திய காங்கிரஸ் வாதிகளின் செய்கையைக் கண்டிப்பதற்காக ராம்காரில் தீவ்ரவாதிகளின் கூட்ட மொன்றை நடத்த ஸ்ரீமான் ஸுபாஷ்போஸ் ஏற்பாடு செய்திருக்கிறார். இதைக் கண்டு காந்தியர்கள் கலக்கமுற்று தடை வேலை செய்ய முயற்சிக் கிறார்களாம். காங்கிரஸ் பந்தலில் இந்த மஹாநாடு கூட்ட இடம் கொடுக்க மறுத்து விட்டதாகத் தெரிகிறது.

## குடந்தை
## ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவில்

### நோட்டிபிகேஷன் உத்திரவு வாபீஸ்

கும்பகோணம் ஸ்ரீசாரங்கபாணி ஸ்வாமி கோவில் நிர்வாஹம் பற்றி மதஸ்தாபன போர்டார் நோட்டிஸ் செய்திருந்த விஷயம் ஏற்கனவே ஆர்ய தர்மத்தில் பிரசுரிக்கப் பட்டிருந்தது. கோவில் டிரஸ்டிகள் நோட்டியை செய்ததை ஆக்ஷேபித்து தங்கள் கக்ஷிகளை எடுத்து வாதித்ததன் மீது போர்டார் தங்களது உத்திரவை வாபீஸ் பெற்றுக் கொண்டார்கள். டிரஸ்டிகள் தங்கள் நிர்வாஹத்தை இனி நன்கு நடத்துவதாக உறுதிமொழி கொடுத்த காரணத்தினும் நோட்டிபிகேஷன் உத்திரவை ரத்து செய்வதாக போர்டார் தங்கள் உத்திரவில் கூறியிருக்கிறார்கள்.

## வங்காள காங்கிரஸ் கமிட்டி
### ஸஸ்பெண்ட் செய்யப் பட்டது

காங்கிரஸ் கார்யக் கமிட்டியானது வங்காளமாகாண கமிட்டியின் அடங்காமை காரணமாக அதை ஸஸ்பெண்டு செய்து விட்டது. இதனல் காங்கிரஸ் மஹாஸபையானது ஒரு பெரிய மாகாணத்தின் பிரதிநிதித்வத்தை இழந்து விட்டது. ஸுபாஷ் போஸ் போன்ற வங்காளத் தலைவர்கள் தங்கள் மாகாணக் கமிட்டி எப்போதும் போல் வேலை செய்து வருமென்று சொல்லி வருகிறார்கள்.

## குழந்தைகளின் ஆரோக்யம்.

பரிசுத்தமான உணவுதான் ஆரோக்யத்தை கொடுக்கவல்லது. குழந்தைகளுக்கு, அஜீர்ணம், கட்டி, மாந்தம், முதலிய எல்லாவித நோய்களும், புட்டிகளில், நாள்பட வைக்கப்பட்டிருக்கும் சேர்க்கையான உணவை ஊட்டுவதே. சிறு குழந்தைகளுக்கு, தாய்பால் குறைந்திடின் பயஸ்யா என்னும் கைகண்ட ரஸாயனத்தை, தாய்மார்கள் அருந்தவேண்டும். பயஸ்யா தாயின்பாலை மிகுதியாக வளர்க்கிறது. புஷ்டியாகவும் செய்கிறது.

கிடைக்குமிடம்:—
ATREYA AYURVEDIC WORKS,
Thennore Road, Trichinopoly.

## நமது ஆசார்யாளின் அவ்யாஜகருணை

(காக்கழணி கிருஷ்ணமூர்த்தி)

பகவான் பஞ்சகிர்த்தியபரன். சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார, திரோபவ, அநுக்கிரஹம் என்னும் ஐந்து தொழிலும் பகவானின் திருவிளையாடலாகும். ஞான நிஷ்டையை மோன முத்ரையால் சனகாதிகளுக்கு உபதேசிக்க பகவான் தக்ஷிணா மூர்த்தி யென்ற குருவாய் அவதரித்தார். தர்மாதர்மங்களையும், ஞான நெறியினையும் உள்ளங்கைநெல்லிக்கனி போல் யாவரும் பகுத்துணரும்படி பற்பல நூல்களியற்றி, பாமரர் முதல் பண்டிதர் வரையுள்ள பலரையும் உஜ்ஜீவிக்கச் செய்து எல்லா அதிகாரிகளையும் ஈடேற்ற அவதரித்தவர் நமது பரமகுருவான ஸ்ரீமத்பகவத்பாதாள். அக்குருபரம்பரையில் இன்று நம்முன் அவதரித்து இக்கலியின் கொடுமையினின்றும் விவேகிகளை விடுவிக்க கருணைகொண்டு, பற்பல சுலப அனுஷ்டானங்களை நிர்ணயித்து அதை தனது சிஷ்யகோடிகள் யாவரும் அறிந்தனுஷ்டிக்க சுலபமான வழியையும் காட்டி, நமக்குப் போதிக்க பல ஊர்களிலும் முத்திராதி காரிகள்என்ற முயற்சி யுள்ளகைங்கர்ய சிஷ்யர்களை நியமித்து வரமுற்பட்டிருக்கிறார்கள்.

ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதி களான ஸ்ரீஜகத்குரு' அவாள்கல்பித்திருக்கும் பலநியமங்களும் தற்காலத்தில் நம் தர்மாசரணைகள் நசிக்காமல்காப்பாற்றப்பட இன்றியமையாத சாதனங்களாகும். அவைகளைப்பற்றிய விபரங்களை நேயர்கள் நம் ஆர்யதர்ம மூலியமாகவே அறிந்திருக்கலாம் அவைகள்ஒவ்வொன்றிலும்இஹபரமயமான தத்துவார்தங்கள் அடங்கியிருப்பது நாம் ஊஹித்தோமானல் நன்கு புலப்படும். விவாஹவிஷயமாய் தற்கால பொருளில்லா சிரமத்துக்குப் பரிஹாரமும் சாஸ்திரசம் மதமுள்ள கிரியையாகவும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது உபநயநமான பிள்ளைகளை ஒருவருஷம் பள்ளிக்கூடம் போகாமல் தடுத்து முக்கியமான வேதரிக்குகளையாவது அத்யயனம் செய்ய ஏற்படுத்தப் பட்டிருப்பதில் இனி நமது ஆசரணைகள் நசிக்காமல் வேதமூலம் இதம் பிராம்மம் என்ற சொல் சித்தியைப் பெறுகிறது. கோ சம் ரக்ஷணம் அவச்யமாய் நடைபெறும். யாகயக்ஞாதிகள் குறைவுபட்ட கலியில் தேவதாதிருப்தியை ஷடி கோவின் ஆஜ்ய ஆகுதியை ஸ்ரீசற்குரு நாதனின் அகண்ட தீபஹோம பலத்தால் நாம் அனைவரும் அடைந்து நம் நாட்டுக்கு பல க்ஷேமங்கள் உண்டாக அடிக்கோலியாய் விட்டது இனி ஆசார்யாளின் சேஷமாகவே யாவரும் அன்னம் புசிக்கும் ஒரு ஆஸ்திக புத்தியை அவரவர்கள் நெல்லாகவோ சம்பாவனையாகவோ சமர்பிப்பதால், அடைவோம். அதினல் நமக்கு வைசுவதேவாதியக்ஞங்களால் அடையப்படும் பலன்கள் உண்டாகி விடுகிறது. அதாவது:—

பஞ்ச சூனா கிரஹஸ்தானாம் என்ற பாபத்திலிருந்து விடுபட்டவர்களாவோம். ஏகாதசி தினத்தில் சிவகைங்கர்யம், புராண சிரவணம் முதலிய புண்ய பலன்கள் ஏற்படுகிறது. இதன் மூலியம் பலர்கள் ஏகாதசி விருதானுஷ்டான சிரத்தாவான்களாக ஆகிவிட சந்தர்ப்பம் வாய்த்துவிடும். பலசமுதாய நன்மைகளும் கிருமஒத்துமையும் ஏற்பட இது ஒரு மூலகாரணமாகலாம். இனி மதம் மாறும் சுபாவம் மறைந்துவிடுமெனவே சித்தாந்தமாகச் சொல்லலாம்.

இவ்வித நன்மைகளை நமக்குச் செய்ய முன்வந்த ஸ்ரீமத் ஆசாரியாளின் அவ்யாஜகருணைக்கு நாம் யாவரும் பாத்திர பூதாளாகி, அவாளிடம் இடை விடாபக்தி செய்து. அப்போதைக்கப்போது அவாளால் ஆக்ஞை செய்யப்படும் ஒவ்வொரு விஷயத்திலும் உத்யுக்தாளாய் யிருந்து சிரத்தையுடன் நடந்து வர வேண்டியதே நமது கடமையாகும்.

நமது ஆசார்ய பீடத்தில் அமரும் சற்குரு நாதர் ஆதிபரம குருவான ஸ்ரீபகவத்பாதாளாகவே நாம் கருதி பக்தி செய்யவேண்டியது நமக்கு அத்யாவசியம். துரோண விக்கிரஹத்தைஉபாசித்து சித்திபெற்ற ஏகலைவன் உபாக்யானத்தை உள்ளபடி அறிபவர்களுக்கு இந்த என் கோறுதல் ஒப்புக்கொள்ளத்தக்க தென்ற நிச்சயமுண்டாகும். ஆசாரியாளின் பரமகருணை பலருக்கும், பலன் தருவதோடு அவாளின் ஆக்ஞையில் சம்ரக்ஷிக்கப்படும் ஆபீஸ் நிர்வாஹ கைங்கர்யபக்தர் களுக்கும் தர்மாதர்ம விவேசன புத்திப் பிரவாகத்தை தந்தருளுமென நம்புகிறேன்.

"ஞான நிஷ்டையை நல்கு நற்றேசிகன்
மான முற்றிடு மானிடனல்லனல்
வான முற்று வளர்க்க யிலைப்பரன்
தானெனத்தினம் சாற்றிட லாகுமே,,

என்ற நிஷ்டானுபூதி உபதேசப்படி நித்தியம் குருபக்தியில் ஈடுபட்டு, சாக்ஷாத்பரம சிவனே மானிடச்சட்டை போர்த்து வந்தாரென மனோபாவங் கொண்டு பஜித்து வருவோமானல் நமக்கு ஐஹிக ஆமுஷ்கிக பலன்களும், சர்வதுக்க நிவிர்த்தியும், தடையற்ற ஆனந்தமும் அந்த அவ்யாஜகருணா மூர்த்தியான சங்கரனே அளிப்பாரெனபதில் அணுவளவும் ஐயமில்லை.

"கருடனுருவைக்கருது மளவிற் பருவிடந்தீர்ந்து பயங் கெடுமாபோற்
குருவினுருவங் குறிகொண்டு நிற்கத் திரிமலந் தீர்ந்து சிவனவனுமே'

என்னும் திருமந்திரப்படி குருஸ்மரணையால் கருப்பை வாசக் கட்டவிழ்ந்து நாம்யாவரும் கடைத்தேற மார்க்க முண்டு என்பதை மறவாமலிருக்க நமது பரம குருநாதனின் பாதபத்மங்களில் பன்முறையும் நமஸ்கரிப்போமாக,

## சுயேச்சை தான் வேணும்

### யுத்தத்தில் ஒத்துழைக்க முடியாது

#### கார்யக் கமிட்டி தீர்மானம்

பாட்னவில் கூடிய காங்கிரஸ் கார்யக் கமிட்டியானது ஒரு முக்ய தீர்மானத்தை நிறை வேற்றி இருக்கிறது.

இந்தியாவிற்கு சுயேச்சை தான் வேணுமென்றும், அதற்கு குறைந்த எதையும் ஏற்க முடியாதென்றும், அரசியல் நிர்ணய ஸபை மூலம் இந்தியா தனது ராஜ்ய திட்டத்தை வகுத்துக்கொள்ள உரிமையிருப்பதாயும், மைனரிடிகளுக்கு தக்க பாதுகாப்பு அளிக்க காங்கிரஸ் தயாராயிருப்பதாயும் இந்த யுத்தமானது இந்தியாவைக்கேளாமல் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாயும் இந்தியர்களின் ஸம்மதியன்றி பணமும் ஆள்களும் கொடுக்கப்படுவதாயும், காங்கிரஸ் இந்த யுத்தத்திற்கு உதவிபுரிய முடியாதென்றும் வேறு பலவும் இந்த தீர்மானத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

## விமான விபத்து

### ஸர் பன்னீர் செல்வத்தின் கதி என்ன ?

மார்சு 1-உ யன்று கராச்சியிலிருந்து புறப்பட்ட விமானமானது இதுவரை இருக்குமிடம் தெரிய வில்லை. இதில் தபால்களும், ஸர் பன்னீர் செல்வம் முதலிய 8 பேர்களும் இருந்தார்கள். பல விமானங்கள் சென்று தேடியும் புலன் கிடைக்கவில்லை. கடைசியாகக் கிடைத்துள்ள தகவலின்படி விமானம் ஸமுத்திரத்தில் விழுந்திருப்பதாகத் தெரிகிறதாம். பிரயாணிகள் உயிருடன் இருப்பார்களென்று நம்ப இடமில்லையாம். அந்த விமானத்தைத் தேடும் வேலை கைவிடப்பட்டதாம்.

தஞ்சை ஜில்லா பிரபலஸ்தரான ஸ்ரீமான் பன்னீர் செல்வம் தமக்குக் கிடைத்த இந்தியா மந்திரி ஸபை ஆலோசகர்பதவியை ஏற்பதற்காக இந்த விமானத்தில் சீமைக்கு புறப்பட்டு போனர். அவர்கதி என்னவென்று தெரியவில்லை.

## ஹிந்து தர்ம ஸங்கம்

### சைதாப்பேட்டை

#### ஓர் பொதுக்கூட்டம்.

நாளது மாசி-மீ 10 தேதி (22-2-40) வியாழக்கிழமை சைதாப்பேட்டை, ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் நடக்கும் பிரம்மோஸ்ஸவத்தில் 9வது நாள் இரதோஸ்வத்தில் இரவு ஷடி ஆலயத்தின் பந்தலில் இரவு 9 மணிக்கு மேல் மகா-ா-ஸ்ரீ சங்கீத வித்வான் தேவாரம் ஸ்ரீசுந்திர மூர்த்தி ஓதுவார் அவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது.

ஸ்ரீ ஓதுவார் பேசுகையில் நமது மத விஷயத்தில் ஒன்றும் அறியாத பாமரர்கள் எல்லாம் சீர்திருத்தம் என்றும் வியாஜத்தை வைத்துக்கொண்டு நம்மதாசாரியார்களையும் நம் பண்டாரசன்னதிகளையும் தூஷிக்கும் பாமரர்களை நாம் கண்டிக்கவேண்டும் என்றும் கூறினர். பிறகு பண்டிதர் ஸ்ரீரங்கநாத அய்யங்கார் ஆலயபிரவேசத்தை கண்டித்தும் நமது தர்மத்தின் தத்கால நிலைமையைப்பற்றியும் பேசினர்.

பிறகு கெ. பார்த்தசாரதி அய்யங்கார். (ரிடயர்ட்மேஸ்ரிட் எட்கிளார்க்கு) நமது ஆசாரங்களைவிட்டு மேல் நாட்டு ஆசாரங்களை பின்பத்துவதால் தான் நம் புண்ணிய பூமி இப்படி மழையில்லாமல் பஞ்சமும் அகாலமரணங்களும் ஏற்படுகிறது என்றும் பேசினர். சை. ந. கிருஷ்ணபட்டாசாரியரால் நமதூராருக்கும் சபையில் இருந்தவர்களுக்கும் மனமார்ந்த வந்தனம் கூறியதும் கூட்டம் முடிந்தது.

மாசி-மீ 12உ சனிக்கிழமை மேல்கண்ட சபையில் தீர்மானித்த தீர்மனங்களாவன:- மதுரை மீனக்ஷி அம்மன் கோவிலில் காங்கிரஸ்கொடிபோட்டு இருப்பதை இந்த சபை கண்டிப்பதாக கிருஷ்ணபட்டாசாரியால் பிரேபித்து ஏகமனதாக நிறைவேறியது.

சைதாப்பேட்டை காரளீஸ்வர் கோவில் உத்ஸவங்களுக்கு காங்கிரஸ் கொடியை தூக்கிக்கொண்டு வருவதை கே. பார்த்தசாரதி அய்யங்கார் கண்டித்து பிரேபிக்க ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

கூட்டம் இரவு 1-2 மணிக்கு இனிதாக முடிந்தது.

கிருஷ்ணபட்டாசாரியார்.

## காந்தியும் பெஸண்டும்

கே. வரதாசாரியார் பி.ஏ., பி.எல்.,

காந்தியும் டாக்டர் பெஸண்டும் அனேக அம்சங்களில் ஒத்திருக்கின்றனர் இருவரும் இந்திய தேசாபிமானிகள். இருவரும் இந்தியாவிற்கு வெளியே தங்கள் இளம் பிராயத்தை கழித்துவிட்டு பிற்பகுதியில் இந்தியாவுக்கு வந்தவர்கள் தேசீய முன்னேற்றமின்றி இந்தியா தனக்கோ உலகத்துக்கோ உதவமுடியாதென்பதை இருவரும் ஆதிமுதலே அறிந்துகொண்டு ராஜீய ஸ்வதந்திர போருட்டத்தில் இடுபட்டார்கள். ஜனங்களை மயக்கிவைக்கும் வாக்வன்மை வாய்ந்தவர்கள் இருவரும் பொதுமக்கள் கண்டு ஏமாரும் சப்த சித்ரங்களையும் கல்பித நெருக்கடிகளையும் ஆக்க வல்லவர்கள். ஜனங்கள் அறிந்துகொள்ளாமலேயே ஓர் திட்டத்தினின்று பின்வாங்கியும் விடுவார்கள் அதைவிட விசித்திரமானதாகவும் புத்தியை மோஹிப்பதுவொரு திட்டத்தை தயாரித்து விடுபவர்கள். இருவரும் எப்படியும் தாங்கள் பிடிவாதத்தையே நிறைவேற்றுகிறவர்கள். இருவரும் காங்கிரஸில் சேர்ந்துகொண்டபோது சிறுபான்மையினருக இருந்தும் கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் செல்வாக்கை பெருக்கிக் கொண்டு காங்கிரஸ் ப்ரஸிடெண்டாகவும் இந்திய ராஜீய தலைவராகவும் ஆனார்கள். தங்கள் கொள்கைகளின் மஹிமையினாலல்ல. தங்கள் ஆத்மத்யாகத்தினால் மட்டிலுமே.

தன் கொள்கைகளையும் முறைகளையும் பரப்ப டாக்டர் பெஸண்ட் "ந்யூ இந்தியா" என்னும் பத்திரிகையை ஆரம்பித்தார். இருவருமே வைஸ்ராய்களாலும் கவர்னர்களாலும் தங்கள் மாளிகைகளுக்கு வரவேற்கப் பட்டனர். அப்படியே இருவருமே சிறை சென்றவர்கள். மன்னர் பிரானாலும் பார்லிமெண்டாலும் கொண்டாடப்பட்டவர்கள். பெஸண்ட் காமன்வெல்த் இந்தியா பில் என்பதை தயாரித்தார் காந்திஜி லண்டனுக்கு அழைக்கப்பட்டு வட்டமேஜை மஹாநாட்டில் இந்திய அரசியல் திட்ட நிர்மாணத்தில் ஈடுபட்டார். சர்க்கார்களாலும் ஜனங்களாலும் இருவரும் கொண்டாடப்பட்டார்கள்.

இந்திவிற்காக இருவருமே பாடுபட்டவர்கள், தங்கள் சிறை வாஸங்களாலும் தங்கள் பத்திரிகை நிரூபங்களாலும் இருவருமே இந்தியாவின்மீது வெளிதேசத்தவர்களின் கவனத்தை இழுத்தவர்கள்.

பெஸண்ட் எளியவாழ்க்கையை உபதேசித்தார், காந்திஜீ இன்னும் அதிகமாகவே உபதேசித்தார், ஓர்சவுக்கமே உடுக்கப்போதுமென்றார். மூவர்ண ஹோம் ரூல் கொடியை பெஸண்ட் ஏற்படுத்தினார் அதில் ஓர் சர்காவையும் காந்தி சேர்த்துக்கொண்டார். அடயாரில் ஓர் பெரிய ஆச்ரமதத்தை நிர்மாணம் செய்து கொண்டார் ஒருவர். ஸபர்மதியில் ஓர் ஆச்ரமத்தை ஏற்படுத்திக் கொண்டார் மற்றவர், ஒருவர் மித போஜனத்தைக் கொண்டவர், மற்றவரின் உபவாஸங்களுக்கோ கணக்கில்லை. ஒருவர் தன் ஆச்ரமவாஸிகள் சிலரால் வருத்தமுற்றவர். மற்றவர் தன் ஆச்ரமத்லேயே களங்கத்தைக் கண்டு ஏங்கினவர்.

ஆயினும் இருவருமே இந்தியாவை காக்க வந்த அவதார புருஷர்களாக தற்சமயம் கருதப்பட்டனர். இருவருக்கும் உபாஸகர்கள் அகப்பட்டனர். இருவரும் தாங்கள் மத அூதர்கள் தான் என்று ப்ரமிக்கும்படி ஸ்தோத்ரம் செய்யப்பட்டனர் ஆகையால் தங்கள் வழியை சரிதையை தாங்கள், உலகிற்கு, பின்னோர் கண்டு வியக்க, எழுதிவைத்து விட வேண்டியது தான் என்று நம்பி எழுதியும் வைத்து விட்டார்கள். ஹிந்துக்களின் சாஸ்திரங்களோ முஹம்மதியர்களின் கொரானோ கிருஸ்தவர்களின் பைபிளொ, பார்ஸிகளின் ஆவஸ்டாவோ எதற்கும் உள்பொருளை தாங்களே கண்டு பிடித்திருப்பதாக வெளியிட இருவரும் முன் வந்தார்கள், இருவருக்கும் பகவத்கீதையில் விசேஷ வ்யாமோகவும் ஜனங்கள் அதன் உட்பொருளை உள்ளபடி உணர்ந்து சீர்திருந்த வேண்டுமென்று இருவரும் பாடுபட தொடங்கினர். எல்லா விஷயங்களிலும் ஸரியானபடிய தாவத்தாக உணரும் தன்மை தங்களிடமே இருப்பதாகவும் தாங்கள்தான் ஸர்வஞர்கள் என்றும் உலகம் தர்மாதர்மங்களை தங்களைச் கேட்டே தெரிந்து கொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்ளவும் ஆரம்பித்து விட்டனர் இருவரும் பெரிய மேதாவிகளும் தயங்கும் விஷயங்களில் அசட்டுத்துணிச்சலுடன் தலையிடத்துடங்கினார்கள்.

தங்களுக்கு தெரியாத விஷயங்களையும் தெரிந்ததாக எண்ணிக்கொண்டு பேச முற்பட்டார்கள். தாங்கள் ஆரம்பித்த ராஜ்ய ஸ்வதந்திரவிஷயத்தையும்மறந்தனர். தாங்கள் மஹான்கள் அஸாதாரணமானவர்கள் என்று காட்டிக் கொள்ள வேண்டி புதிய வழியில் தர்மத்திற்கு அர்த்தம் செய்து போதிக்கலுற்றார்கள். அது முடியாமற் போகவேஎதிர்த்தார்கள் அந்த தர்மத்தையே. பெஸன்ட் தன் ஆங்கில சிஷ்யன் ஒருவனுக் ஓர் பிராமணப் பெண்ணை மணம் செய்து வைத்தாள். தன் பிள்ளைக்கு ப்ராமணப் பெண் ஒருவளை மணம் புரிந்து கொண்டார் காந்தி. ஹிந்து தர்மத்துக்கே அவமானம். ஆயினும் வேதமந்திரங்கள் அக்னிஸாக்ஷிகம் மஹாதேவ சாஸ்திரிகள் அல்லது லக்ஷ்மண் சாஸ்திரிகள்!!! குறைவில்லை!!! சாஸ்திரிகள் மஹாபண்டிதர்கள் என்று ஜெகத்ப்ரஸித்தி அடைந்து விட்டனர். ஆனால் இப்படி ஹிந்து மதத்தை அவமதித்து கைமேல் பலனை அளித்துவிட்டது. ஹிந்துக்கள் இவர்கள் இருவரையும், உடனேயே தங்கள் மதிப்புக்கு பாத்ரமல்ல என்று கண்டு விலக்கினார்கள். உடனே இருவரும் தேசிய விஷயத்திலும் ராஜிய விஷயத்திலும் எல்லா செல்வாக்கு இழந்து, சிந்துவாரன்றி ஒளிந்து மறைந்தனர்.

அனேக வாணங்கள் ஆகாயத்திற்கு எழும்பி, சிறிது நேரம் ஜ்வலித்து விட்டு, பிறகு இருந்த இடம் தெரியாமல் கீழே விழுந்து மறைகின்றன. விசித்திரவர்ணங்களினால் சிற்சிலகாலம் உலகத்தைமயக்கி, கண்டவர் வியக்க காட்சி அளித்த அவைகள் இப்பொழுது எங்கே? மினுமினு என்று ஒளிவீசும் நக்ஷத்திரங்களைக் காட்டிலும் பிரகாசமாய் ஆகாயத்தில் ஸ்திரமாய் நித்யமாய் தோன்றும் இதரஜோதி ராசிகளையும் கூட தன் புதிய ப்ரகாசத்தால் மறைத்துக் கொண்டு சிறிது வினாடிகள் வாழ்ந்தனவே அவைகள் இப்பொழுது எங்கே? எவ்வளவு காலம் மேலே நிற்க முடியும்? கீழே விழுகின்றன! புகைமட்டில் தான் சேஷம். ஆனால் ஸனாதன நக்ஷத்திரங்களா? ஆடம்பரம் இன்றிஸ்திரமாக சாந்தமாக உலகிற்கு உதவி செய்து கொண்டே வருகின்றன. வானங்களைக் கண்டுமயங்காமல், இந்தநச்வரங்களைக் கண்டு திகைக்காமல் தங்கள் சாச்வததர்மத்தை அனுஷ்டித்து கொண்டே வருகின்றன. அது தான் இந்தியாவின் தர்மம். காந்திஜீ பெஸண்ட் இவர்களைக் காட்டிலும் இன்னும் விசித்திரமான உஜ்வலமான வாணங்கள் பலவற்றை கண்டிருக்கிறது.

ஓர் க்ஷணிககாலம் தங்கள் சபலஜ்வாலவங்களால் கண்ணைக்கவர்ந்துவிட்டு பிறகு மறைந்துவிட்ட இத்தகைய வாணக்குழாய்கள் எவ்வளவோ இந்தியாவின் குப்பையில் குவிந்து கிடக்கின்றன. அவைகளைக் கண்டு இந்தியதர்மம் சஞ்சலப்பட்டதுமில்லை, கலக்கமுற்றதுமில்லை. ஸனாதனமான தர்மத்தை அனுஷ்டித்து தன் மார்கத்தில் சலன மற்று சென்று கொண்டே இருக்கிறது.

"தர்மராஜ்யா"

### உத்தர ராமாயண ப்ரவசனம்.

நமது நகர் பக்தபுரி அக்கிரகாரம் படித்துறையில் 2-3-40 சனிக்கிழமை முதல்பிரதி தினம் மாலை 6-30 மணிக்குபானுதுரை ஸம்ஸ்கிருத வித்வான் பிர்ம்மஸ்ரீ பாலகிருஷ்ண தீக்ஷிதர் அவர்கள் உத்தர ராமாயணத்தை ப்பிரவசனம் செய்து வருவதால் அன்பர்கள் அனைவரும் விஜயம் செய்து ஆனந்திக்குமாறு வேண்டப்படுகிறது.

பக்த ஜனங்கள்.

### அகில இந்தியவர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம்
### விசேஷ மகாநாடு.

#### திருக்கோஷ்டியூர்

திருக்கோஷ்டியூரில் மாசிமக உத்ஸவத்தில் மாசிமீ 11, 12உகளில் பட்டமங்கலம் நாட்டுத் தலைவர் ஸ்ரீமுத்தழகு சேர்வை அவர்கள் கருடதுவஜம் ஏற்ற, அகில இந்தியவர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத் தலைவர் ராவ்சாகேப் என். நடேசய்யரவர்கள் மஹாநாட்டை ஆரம்பித்து வைக்க, தேவகோட்டை பாலகவி. ஸ்ரீ வைநகாம், வே. இராமநாதன் செட்டியவர்கள் தலைமையில்மஹாநாடு விமர்சையாக நடைபெற்றது. தீர்மானங்கள் பல நிறைவேற்றப் பட்டன. மதுரை ஸ்திரீ ரத்தினங்களான ஸ்ரீமதி மீனாக்ஷி அம்மாள், சேஷலெக்ஷிமி அம்மாள், செல்லம்மாள் முதலானவர்களும், மதுரை ஸ்ரீ என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார், மன்னார்குடி தர்க்க வித்வான் உ. ப. வே. ராமபத் ராச்சாரியஸ்வாமிகள், கோவிலூர் வி. வி. ரெங்கனாதசாஸ்திரிகள், காரைக்குடி சே. வு. மெய்யப்ப செட்டியார், ஆத்தங்குடி சு. வீர. கதிரேசன் செட்டியார் முதலான தலைவர்களும் உணர்ச்சி ததும்பும் சொற்பொழிவாற்றினார்கள். தீர்மானங்கள்குறித்து மற்றும் பல அன்பாகள் பேசினர். மஹாநாடு எல்லா வகையிலும் சிறப்பாக இனிது நிறைவெய்தியது. குறிப்பாக தெற்கு வட்டகையில் புத்துணர்ச்சியை உண்டுபண்ணிற்று. மஹாநாட்டுத் தலைவர் ஸ்ரீராமனாதன் செட்டியாரவர்களின் கருத்து நிறைந்த உரைபோற்றுதற்குரியது.

#### ஆத்தங்குடி

#### ஸ்ரீ ராமாயண பட்டாபிஷேகம்

பிரமாதி ஹூ மாசிமீ 16உ புதன்கிழமை இரவு 8மணிக்கு வேதபாட சாலையில் மன்னார்குடி தர்க்க வித்வான் ஸ்ரீ உ.ப.வே. ராமபத்ராச் சாரியஸ்வாமிகள், பக்திரஸம் ததும்ப கேட்போர் மனம் பரவச மடைய ஸ்ரீராம பட்டாபிஷேக கட்டதை ப்ரவசனம் செய்தார்கள். வைபவம் இரவு 10 மணிக்கு முடிவுற்றது.

த. கி.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-வரு மாசி-மீ 24உ

## ஸனாதனிகளுக்கு காந்தீய காங்கிரஸ் வேண்டாம்

தென்னிந்தியாவில் ஹிந்து மஹாசபை தலைகாட்ட ஆரம்பித்துவிட்டது. பிரஸித்தி பெற்ற அதன் தலைவர்கள் தென்னாட்டில் பிரசாரம் செய்யவரப்போகிறார்கள். இது ஏற்கனவே துர்ப்பலமடைந்து வரும் காங்கிரஸுக்கு இன்னும் பலஹீனத்தைக் கொடுக்கக்கூடியது. இந்த அச்சம் எங்கும் தோன்றியிருக்கிறது. இச்சமயத்தில் ஏற்கனவே காங்கிரஸிடம் வெறுப்புக் கொண்ட தென்னிந்திய ஸனாதனிகள் ஹிந்து ஸபையில் சேர்ந்து காங்கிரஸ்ஸை நசுக்க முற்படலாமென்ற பீதியானது, நமது மதிப்பிற்குரிய ஸனாதனவீரரான மஹாமஹோ பாத்யாய ஸ்ரீ அனந்த கிருஷ்ண சாஸ்திரிகளுக்கு உண்டாகியிருக்கிறது. ஆதலால் அவர் ஹிந்துப் பத்திரிகையில் ஸனாதனிகளுக்கு எச்சரிக்கை செய்து ஓர் வியாஸம் வெளியிட்டுள்ளார். இதையொட்டி அந்த பத்திரிகையிலும், வெளியிலும் விவாதம் நடந்துவருகிறது.

ஸனாதனிகள் ஹிந்து ஸபையுடன் சேர்ந்து காங்கிரஸை பலஹீனப்படுத்தக் கூடாதென்பது ஸ்ரீ சாஸ்திரிகளின் வாதமாகும். காங்கிரஸில் தீண்டாமை விலக்கு என்ற மத விரோத அம்சம் ஒன்று இருப்பது வாஸ்தவமாயினும் அந்த ஒன்றைத் தவிர மற்ற எல்லா அம்சங்களும் ஸனாதனிகள் ஏற்கக்கூடியவைகளாகவே இருக்கின்றனவென்று ஸ்ரீ சாஸ்திரிகள் கூறுகிறார்கள். அந்த மத விரோத அம்சத்தையும் ஸனாதனிகள் சண்டையிட்டு காலக்ரமத்தில் காங்கிரஸிலிருந்து நீக்கி விடலாமென்றும் ஸ்ரீ சாஸ்திரிகள் நம்புகிறார். ஹிந்து மஹாஸபையும் ஸனாதன தர்ம விருத்தமான கொள்கையைக் கொண்டிருப்பதால் அதனுடன் ஸனாதனிகள் சேர இடமில்லையென்றும் ஸ்ரீ சாஸ்திரிகள் விளக்கி, காங்கிரஸையே நாம் ஆதரிக்க வேண்டுமென்று முடிவு கூறுகிறார்கள்.

ஸ்ரீ சாஸ்திரிகள் சிறந்த ராஜீய பிரக்ஞையுள்ளவர். உறுதியுள்ள தீவ்ர ஸனாதன தர்ம ஸ்வரூபியாவார். அப்படியிருந்தும் அவர் தற்கால காந்திய காங்கிரஸின் அடிப்படையான விபரீதக் கொள்கைகளை மறந்து பேசுவதாகவே நாம் எண்ண வேண்டியிருக்கிறது. ஸ்ரீ சாஸ்திரிகள் வெளியிட்டுள்ள அபிப்பிராயம் ஸனாதனிகளால் ஏற்கக்கூடியதல்லவென்பதை நாம் வருத்தத்துடன் சொல்ல வேண்டியிருக்கிறது.

ஸனாதனிகள் ஹிந்து மஹா ஸபையுடன் சேரலாமா, சேர வேண்டுமாவென்ற விஷயம் தனியானது. அதைப்பற்றிப் பிறகு யோஜிக்கலாம். ஆயினும் நாம் காங்கிரஸுடன் சேருவதற்கு இடமில்லையென்பது வெகு தெளிவாக இருக்கிறதை முதலில் நிரூபணம் செய்வோம்.

காங்கிரஸைப் பொது ஜனங்கள் ஆதரிப்பதும், நிராகரிப்பதும் அவ்வப்போது அது வஹிக்கும் கொள்கையைப் பொறுத்ததே. அதை நடத்தும் தலைவர்களுடைய போக்கையும் அநுஸரித்ததே. காங்கிரஸின் ஆதிசரித்திரம் முதலாகப் பார்த்தால் அது அவ்வப்போது ஏற்படும் தலைவர்களின் போக்கின்படி, பற்பல வித கொள்கைகளையும், உபாயங்களையும் மாறி மாறி அவலம்பித்து வந்திருப்பது தெரியும். அந்தந்தக் கொள்கைகளுக்கு ஏற்றபடி, காங்கிரஸில் சேருகிறவர்களுமுண்டு. அதை விட்டுப் பிரிகிறவர்களுமுண்டு. ஏற்கனவே பிரபல காங்கிரஸ் காரர்களாயிருந்த பலர் இன்று அதை விட்டுப் பிரிந்து நிற்பதை எங்கும் காண்கிறோம்.

காங்கிரஸ் என்ற பெயருக்காக மட்டும் அதனிடம் விருப்போ, வெறுப்போ காட்டி வரப்படவில்லை. ஸனாதனிகளின் நிலைமையும் இத்தகையதே. ஸனாதனிகள் காங்கிரஸ்ஸை எக்காலத்திலும் விரோதியென்று தள்ளிவிட ஸங்கல்பம் செய்து கொண்டவர்களல்ல. இந்த நியாயப்படி தற்போதுள்ள காங்கிரஸை ஸனாதனிகள் ஆதரிக்க நியாயமிருக்கிறதா? இதுவே முக்ய விஷயம். தற்கால காங்கிரஸை ஆட்டிவைக்கும் காந்திஜியின் கொள்கைப்படி வகுக்கப்பட்டுள்ள காங்கிரஸ் திட்டமானது, ராஜீய அம்சத்திலும், ஸமூஹ அம்சத்திலும் அடியோடுஸனாதனக் கொள்கைக்கு விருத்தமென்பதை எளிதாக அறியலாம்.

தீண்டாமை விலக்குப் போன்ற ஸமூஹ மத விரோத அம்சங்களை நிவிர்த்தி செய்துவிட்டால் மற்ற அம்சங்கள் ஸனாதனிகளுக்கு விரோதமில்லாதவையென்று ஸ்ரீசாஸ்திரிகள் சொல்லுவது ஏற்கக்கூடியதாயில்லை. தற்கால காங்கிரஸ் மூலம் காந்தியம் என்ற விபரீதக் கொள்கை வெகு வேகமாகப் பரவி நம் தேசத்தைப் பாழாக்கி வருவதை ஸ்ரீசாஸ்திரியார் மறந்து பேசுகிறார். காந்திய காங்கிரஸின், ராஜிய ஸமூஹத் திட்டங்கள் யாவும், தர்ம நியாயமான உலக வ்யவஸ்தைகளுக்கும், நீதிகளுக்கும், ஹிந்து ஸமூஹத்தின் அடிப்படையான தர்மங்களுக்கும் முற்றிலும் விபரீதமாயிருப்பதை மறைக்க முடியுமா?

காங்கிரஸ் சாதித்துக் கொடுக்க விரும்பும் ஜனநாயக முறை பாரததேச தர்மத்திற்கு ஏற்றதாவென்பதையே முதலில் கவனிக்கலாம். நமது ஸனாதனக் கொள்கைக்கும் தற்போதிய மேற்றிசை ஜனநாயக முறைக்கும் முற்றிலும் விரோதமிருக்கிறது. மேலும் காங்கிரஸ் போதிக்கும் அபேதவாதம், பூர்ண அஹிம்ஸை, ஒத்துழையாமை, சட்டமறுப்பு போன்றவை நமது ஸனாதனத்திற்கு ஒரு அணு அளவு கூட ஏற்றவைகளல்லவென்பதை ஸ்ரீ சாஸ்திரியாருக்கு நாம் ஞாபகப்படுத்த வேண்டுமோ? காங்கிரஸ் வகுத்துள்ள, சர்க்கர், கதர் முதலிய நிர்மாண திட்டங்களையும் ஸனாதனிகள் ஏற்கமுடியுமா? சர்க்கா சுற்றுவதாலும், கதர் கட்டுவதாலும் ஸ்வராஜ்யம் வருமென்ற குருட்டு நம்பிக்கையை ஸனாதனிகள் அப்படியே ஏற்கவேண்டுமென்று ஸ்ரீ சாஸ்திரிகள் விரும்புகிறாரா?

மேலும் காங்கிரஸை தன்னிச்சைப்படி ஆட்டிவரும் காந்திஜியின் போக்கும் ஸனாதனிகள் காங்கிரஸை ஆதரிக்கத் தடையாயிருக்கிறது. காந்திஜி ஸமூஹத்திருத்த நோக்கமுள்ளவர். அதை சாதித்துக் கொள்ளவே ராஜீயத்தில் புகுந்திருக்கிறார். இது ஸந்தேஹத்திற்கு இடமில்லாத விஷயம். காந்தீய காங்கிரஸ் தேசத்தில் வலுப்பட்ட பிறகு தான், ஜனங்களுக்கு மத சிரத்தையும் குறைந்து அவ்யவஸ்தையும் அதிகரித்திருக்கிறது. ஸ்திரீகள், மாணவர்கள் முதலியவர்கள் வரம்பு மீறி நிற்பதற்கும் இந்த காங்கிரஸே காரணமல்லவா? காந்திஜீ சுருதி, ஸ்மிருதி பிரமாணங்களை வெறுப்பவர். தன் இஷ்டத்தையே ஜனங்கள் மீது திணிக்கப் பாடுபடுகிறவர். இதையே காங்கிரஸ் மூலம் அவர் செய்கிறார். ஆதலால் பிராமண சரணர்களான ஸனாதனிகள் தற்கால காங்கிரஸை எப்படி ஆதரிப்பது? முஸ்லீம்கள் தற்கால காங்கிரஸை ஏற்கவில்லை. ஹிந்து மஹா ஸபையார், ஆர்ய ஸமாஜிகள், ஜஸ்டிஸார், வங்காளிகள் போன்ற பற்பலப் பிரிவினரும் காந்தி ஆதிக்யம் காரணமாக காங்கிரஸை விட்டு விலகி நிற்கையில் ஸனாதனிகள் மட்டும் அதை ஆதரிக்க நியாயமான காரணமேது?

ஹிந்து மஹா ஸபையும் நமக்கு விரோதமென்று ஸ்ரீ சாஸ்திரியார் கூறுகிறார். அதை நாம் ஆக்ஷேபிக்கவில்லை. ஆனால் ஹிந்து ஸபையின் அடிப்படையான கொள்கையும் உத்தேசமும் மிகக் சிறந்தது. ஹிந்து தேசத்தின் தர்மங்களையும், உரிமைகளையும் நாகரீகத்தையும் அது காப்பாற்றக் கூடியது. காங்கிரஸைப்போல், ஜாதிகளை அழித்து, தர்மங்களைக் குலைத்து, அவ்யவஸ்தைதைப் புகுத்தி, இந்தியாவின் உயிரான ஹிந்து நாகரீகத்திற்கு அழிவு தேடி, அந்நிய தேச அநாகரீகமயமாக நம் தேசத்தைப் பாழாக்க ஹிந்து மஹா ஸபை விரும்பவில்லை. இந்தப் பரிசுத்தமான உத்தேசமொன்றே ஹிந்து ஸபையை ஆதரிக்கப் போதுமானதன்றோ?

## ஸர். ஸி. பி க்கு ஸ்ரீசிருங்கேரிஸ்வாமிகள் பேட்டி.

### "ஆலயப்பிரவேச விளம்பரத்தை ரத்துசெய்ய வேணும்"

### "தைய்வ ஸான்னித்யம் போய்விட்டது"

ஜகத்குரு ஸ்ரீ சிருங்கேரி ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவர்கள் சில மாதங்களாக காலடி க்ஷேத்திரத்தில் தங்கிவந்தது யாவரும் அறிந்ததே. ஸ்ரீஸ்வாமிகள் அவ்விடமிருந்து புறப்படுமுன்பாக திவான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யருக்கு பேட்டியளித்து நீண்ட நேரம் அவருடம் பேசினார்கள். திருவாங்கூர் அரசர் ஆலயப்பிரவேச விளம்பரம் செய்திருப்பதை ஸ்ரீஸ்வாமிகள் ஆக்ஷேபித்து, கோவில்கள் ஆகம விதிப்படியே ஏற்பட்டவை என்றும், அந்த சாஸ்திரப்படி தீண்டாதார் ஆலயப்பிரவேசமானது தெய்வ ஸான்னித்யத்தை நாசமாக்கிவிடுமென்றும் ஆகவே அந்த விளம்பரத்தை ரத்து செய்யும்படி மஹாராஜாவுக்கு ஆலோசனை கூறவேண்டுமென்றும் திவானுக்கு நியமனம் செய்தார்கள். மதுரை முதலியவிடங்களில் நடந்த ஆலயப் பிரவேசத்தையும் ஸ்ரீ ஸ்வாமிகள் பலமாக ஆக்ஷேபித்தார்கள்.

தர்மராஜியா, 22—2—40.

# குறிப்புகள்.

## ஸ்ரீபடேலின் அறியாமை!

வங்காளத்தில் நடந்த காந்தி ஸேவாஸங்கத்திற்குச் சென்றிருந்த ஸ்ரீமான் படேல் அங்கு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியபோது

> தென்னிந்தியாவில் ஆலயப் பிரவேச எதிர்ப்புக் கிளர்ச்சிகள் அடங்கிவிட்டன.
>
> ஆலயப்பிரவேசத்தை எதிர்த்தவர்கள் கூட அதை இப்போது ஒப்புக்கொண்டுவிட்டார்கள் .

என்று பேசியதாகத் தெரிகிறது. இவ்வளவு ஆதாரமற்ற அபத்தக்கூற்றை, காங்கிரஸில் முக்யஸ்தானம் வகிக்கும் ஸ்ரீ படேல் பேசியதில் நமக்கு ஆச்சரியமேற்படவில்லை. இந்தமாதிரி பொய் பிரசாரம் நடத்தி ஜனங்களை ஏமாற்றுவதையே காந்திய காங்கிரஸ் வாதிகள் ஓர் கடமையாகக் கொண்டிருக்கிறார்களல்லவா? ஆயிரக்கணக்கான மைலுக்கப்பால் இருந்துகொண்டு எந்த அபத்தத்தைப் பேசினால்தான் என்ன? கேள்வி முறையேது? மேற்கண்ட பொய் தகவல் ஸ்ரீமான் படேலுக்கு எங்கிருந்து கிடைத்ததோ? வெள்ளை அதிகாரவர்க்கத்தை தூஷிக்கும் காங்கிரஸ் அதிகாரிவர்க்கமும், தன் கீழ் உள்ள ஊழியர்கள் கூறும் தகவல்களையே நம்பிப் பேசுவது எவ்வளவு கேவலம்? தென்னிந்திய நிலைமையை ஸ்ரீ படேல் நேரில் வந்து அறிந்தாரா? இங்கு ஆலயப்பிரவேச எதிர்க்கிளர்ச்சி நின்றுவிட்டதென்பது உண்மையா? எல்லோரும் அதை ஏற்றுக்கொண்டு விட்டதாகக் கூறுவது எவ்வளவு பெரிய அபாண்டம்?

ஜனங்கள் ஆலய பிரவேசத்தை ஆதரிப்பது வாஸ்தவமானால் மற்ற எல்லா ஆலயங்களிலும் பிரவேசம் ஸுலபமாக நடந்திருக்கலாமே? மீனாக்ஷிகோவிலில் திருட்டுத் தனமாக கார்யம் செய்தபிறகு வேறு எங்கேயாவது அந்த முயற்சி பலித்ததா? ஆலயப் பிரவேசம் நடந்த அசுத்தக்கோவிலில் தைவ ஸான்னித்யமில்லையென்று ஆஸ்திகர்கள் அவைகளை பஹிஷ்கரித்து விட்டதை ஸ்ரீ படேல் அறியவில்லையோ?

தென்னிந்தியாவிலுள்ள மதத்தலைவர்களான மடாதிபதிகளோ மதாசார்யர்களோ மீனாக்ஷி கோவிலை நாளிதுவரை கண்ணெடுத்துக்கூட பார்க்காமல் பஹிஷ்கரித்திருக்கிறார்களே? ஒரு மடாதிபதி யாவது மீனாக்ஷி கோவிலுக்கு வந்தால் ஸ்ரீபடேல் பெருமைப் படநியாயமுண்டு. அதில்லாதவரையில் லக்ஷக்கணக்கான மதாபிமானிகள் அந்தக் கோவிலை பஹிஷ் கரித்திருப்பதை மறைக்க முடியாது.

## ஆலயப் பிவேச சட்டத்தையும் ரத்து செய்பவேண்டியதே.

ஸமீபகாலமாகச் சென்னை கவர்மெண்டார் அவலம்பித்துள்ள கொள்கையைக் கவனித்தால் அவர்கள் இனி ஒரு நிமிஷம் கூட ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்யாமல், வைத்திருக்க நியாயமில்லையென்பது தெளிவாகிறது. ஆலயப் பிரவேசச் சட்டத்திற்கு தேசத்தில் மிகவும் பலமான ஆக்ஷேபமிருப்பதை கவர்மெண்டார் தெளிவாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

மதுரையில் ஸநாதனத் தலைவர்கள் கனம் போக் துரையை பேட்டி கண்டபோது இவ்விஷயத்தை அவர் ஸ்பஷ்டமாக வெளியிட்டிருக்கிறார். அச்சட்டத்திற்குப் பெருத்த எதிர்ப்பு இருப்பதுடன், அது நியாயமற்றதென்பதையும் கவர்ன்மெண்டார் உணர்ந்திருப்பதாக கனம் போக் துரையின் வார்த்தையால் வெளியாகியிருக்கிறது. இப்படியிருந்தும் நீதியற்ற அந்த சட்டத்தை ரத்து செய்ய கவர்மெண்டார் தயங்கிக்கொண்டிருக்க என்ன காரணமென்று ஆஸ்திகர்கள் கேட்டுவந்தார்கள். ஆயினும் கவர்மெண்டார் சென்ற மாதம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் ஆலயப் பிரவேச சட்டத்தை தாங்கள் ரத்து செய்ய முடியாததற்கான காரணமொன்றை குறிப்பிட்டிருந்தார்கள். அதாவது, ஜனநாயக முறைப்படி அமைந்த ஒரு மந்திரி ஸபையும் சீட்ட ஸபையிலுள்ள பெரும்பாலான மெம்பர்களும் செய்த ஒரு கார்யத்தை தற்கால வெர்ன்மெண்டார் மாற்றுவது உசிதமாயிருக்காதென்பதே கவர்ன்மெண்டார் கூறிய ஸமாதானமாகும்.

ஆயினும் இப்பால் கவர்ன்மெண்டார் செய்துவரும் கார்யங்களை கவனிக்கையில் மேற்கண்ட கொள்கையை அவர்கள் கைவிட்டு விட்டதாகவே திட்டமாகத் தெரிகிறது. ஜனநாயக மந்திரிகள் சட்ட ஸபையின் மெஜாரிடி பலத்தைக்கொண்டு செய்த விஷயங்களை தற்கால கவர்ன்மெண்டார் ஒவ்வொன்றாக மாற்றியோ ரத்து செய்தோ வரவில்லையா? கட்டாய ஹிந்தி சட்டஸபை மெஜாரிடியால் செய்யப்பட்ட உத்திரவல்லவா? அதை கவர்னர் ரத்து செய்தாரே? தற்போது விற்பனை வரிச்சட்ட விஷயமாக சட்ட ஸபையின் முடிவைமாற்றியதெப்படி? புகையிலை விஷயத்திலும் மாறுதல் நடக்கப்போகிறதே? கோயம்புத்தூரில் வார்தா திட்டப்படியிருந்த பள்ளிக்கூடத்தை எடுத்துவிடவில்லையா? சட்ட ஸபை தீர்மானித்த மதுவிலக்கு விஸ்தரிப்பை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர மறுத்து விட வில்லையா? கிராமாதிகாரி நியமன விஷயமாக காங்கிரஸ் மந்திரிகள் செய்த உத்திவை கவர்னர் மாற்றிவிட்டாரே? இம்மாதிரி இன்னும் பல விஷயங்களிலும் காங்கிரஸ் மந்திரிகள் செய்த உத்திரவுகளையோ சட்டங்களையோ கவர்னர் மாற்றிக் கொண்டு வரவில்லையா? ஆகையால் மந்திரிகளோ, சட்டஸபையோ செய்ததென்பதற்காக ஒரு கார்யத்தை ஆதரிக்க கவர்னர் பிரியப்பட வில்லையென்பது தெரிகிறது. அந்தந்தக் கார்யங்களின் தன்மையையும் தோஷங்களையும் எதிர்ப்பையும் அநூஸரித்தே மந்திரிகளின் செய்கையையும் கவர்னர் மாற்றிவருகிறார். சட்ட ஸபை மெஜாரிடியோ மந்திரிகளோ செய்தகார்யமென்று சொல்லி ஆலயபிரவேசச் சட்டத்தை ரத்து செய்ய மறுத்து காரணம் கூற இனி இடமில்லை.

ஆதலால் பொது ஜனங்களால் மிகவும் ஆக்ஷேபிக்கப் பட்டதென்று கவர்ன்மெண்டாரே ஒப்புக் கொண்ட ஆலயப்பிரவேச சட்டத்தையும் உடனே கவர்ன்மெண்டார் ரத்து செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள் ஸநாதநிகள் இதை கவர்ன்மெண்டாருக்கு எடுத்துக் காட்டி பலத்த கிளர்ச்சி நடத்த இது தான் ஸரியான ஸமயம்.

## கும்பகோணம்

### 2 வது வார்டு பத்மநாப தெரு வரி செலுத்துவோர்கள் வாஸிகள் சங்கம்

ஷை சங்கத்தின் ஆதரவின் கீழ் 3-3-40 மாலை 4மணிக்கு ஸ்ரீ டி.எஸ் தேசிகாசாரியார் அவர்களின் அக்கிராஸனத்தின்கீழ் மீட்டிங் நடைபெற்றது. கும்பகோணம்

## குன்றக்குடி

### வ. ஸ்வ, ஸங்க பிரசாரம்

பிரமாதி-ஹு மாசிமீ 18உ (1—3—40 வெள்ளிக்கிழமை மாலை 7-மணிக்கு காரைக்குடி ஜில்லா வர்ணாசிரம சுயராஜ்ய சங்கத்தின் சார்பில் குன்றக்குடி ஸ்ரீஷண்முக பெருமான் ஸன்னதி வாயலில் அமைந்திருக்கும் தகரக் கொட்டகையில் அவ்வூர் ஸநாதனிகளின் மாபெரும் கூட்டமொன்று நடைபெற்றது. சுமார் 500 ஜனங்கள் வரை வந்திருந்தார்கள்.

ஆத்தங்குடி ஸ்ரீ அ. வீர. கதிரேசன் செட்டியாரவர்களால் தெய்வ ஸ்தோத்திரம் பாடப்பெற்றது முகவுரையாக தற்காலம் நாம் செய்ய வேண்டிய கடமை என்பதைப் பற்றி விபரமாகப் பேசினார்.

குன்றக்குடி ஸ்ரீமான் து. அ. சாமிநாத குருக்கள். அவர்களை அக்கிராஸனம் வகிக்க பிரேரேக்க ஏக மனதாய் ஆமோதித்து அக்கிராஸனம் வகித்தார். முன்னுரையாக சிலவார்த்தைகள் சொன்னார்.

மதுரைஸ்ரீ M. செல்லையா பிள்ளை அவர்களால் திருப்புகழ் பாடபெற்று தற்காலம் மதுரையில் நடந்து வரும், ஆலயப்பிரவேச எதிர்ப்பு கூட்டங்களின் விபரங்களை எடுத்து உரைத்து அதற்காக நாம் செய்ய வேண்டிய காரியங்கள் இன்னதென்பதையும் எடுத்துறைத்தார்.

காரைக்குடி ஜில்லா வர்ணாசிரம சுயராஜ்ய சங்க காரியதரிசி ஸ்ரீமான் சே. வு. மெ. மெய்யப்ப செட்டியார் அவர்களால் வர்ணாசிரம தர்மம் என்பதைப் பற்றி ஓர் அரிய உபன்யாசம் நிகழ்த்தப் பெற்றது.

மதுரை அட்வகேட் பிர்ம்மஸ்ரீ என். ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்களால் ஆலயப்பிரவேச எதிர்ப்பு என்ற விஷயமாய் தகுந்த உதாரணங்களுடன் மிகவும் இனிமையான ஓர் உபன்யாஸம் நடைபெற்றது.

உடனே அவ்விடத்தில் சுமார் 50 60 மெம்பருக்கு மேல் சேர்ந்தார்கள். பிறகு இவர்களை கொண்ட சபையை ஏற்படுத்தி அதற்கு பிரசிடெண்ட. காரியதரிசி மற்றும் கமிட்டி மெம்பர்களையும் ஏகமனதாக தேர்ந்தெடுக் கப்பட்டது. அக்ராஸனாதிபதி அவர்களால் முடிவுரையாக சில விஷயங்களை எடுத்துரைத்து சபை மென்மேலும் வளருவதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டுமெனவும் எடுத்துரைத்தார்

வந்திருந்தவர்களுக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 9, மணிக்கிசபை இனிது முடிவுபெற்றது.

ந.நி.

---

முனிசிபாலிடியார் சாக்கடை திட்டம் குழாய் தண்ணீர் இரண்டையும் ஆரம்பம் செய்யாமலே $24\frac{1}{4}\%$ வரி வசூலிப்பதைச் கண்டித்து தீர்மானம் செய்யப்பட்டன. சென்ற 2 வருஷங்களாக வரி உயர்த்தினதை உடனே நிறுத்த வேண்டுமென்றும் வசூலித்ததை திருப்பிக் கொடுக்க வெண்டுமென்றும் கவர்மெண்டாரைக் கேட்டுக் கொள்வதென்றும் தீர்மானங்கள் நிறைவேறின. ஷை தீர்மானங்கள் முனிசிபல் சேர்மன் அவர்களுக்கும். லோக்கல் அட்மினிஸ்ட்ரேஷன் டிபார்ட்டு மெண்டு காரியதரிசி சென்னை அதிகாரிகளுக்கும் பிரஸிடெண்டு அவர்களால் அனுப்பப்பட்டன. (ஒ-கி)

## கணபதி அக்ரஹாரம்

### ஸ்ரீமத் ராமாயண புனர்வஸூ மஹோத்ஸவம்

பிரமாதிஹூ பங்குனிமீ 7உ (20-3-40) புதவாரம் புஷ்ய நக்ஷத்திரம் கூடிய சுபதினம்முதல் சிமிழி ப்ரம்மஸ்ரீ வெங்கட்டராமசாஸ்திரியள் அவர்களால் கணபதி அக்ரகாரம் வடக்குத்தெரு ஸ்ரீ ஜி. வெங்கட்டராமய்யர் அவர்கள் கிரஹத்தில் ஸ்ரீராமாயண கதாபிரவசனம் விக்ரமஹூ சித்திரைமீ 3உ (15—4—40) ஸோமவாரம் புனர்வஸூ நக்ஷத்திரம் கூடிய சுபதினம் வரை நடத்தி அன்று பட்டாபிஷேகமும் நடத்தப்படுமென்று கிராம மஹாஜனங்கள் அறிவிக்கிறார்கள்.

## சாதுர்மாஸ்ய மஹாயாகம்

நிகழும் பிரமாதிஹூ பங்குனிமீ 5உ (18—3—40) முதல் 10உ (23—3—40) வரையில் 6 தினங்களில் எனது பிராத சிரஞ்சீவி நாராயண தீக்ஷிதர் சாதுர்மாஸ்யமென்ற மகாயாகத்தை ஸ்ரீ பரமாசார்யாளுடைய அநுக்ரஹத்தை முன்னிட்டு தக்ஷிணமத்யார்ஜுனமென்கிற வடகுடி கிராமத்தில் செய்யப்போகிறார். இந்த யாகமானது பித்ருக்களையும் ஸ்ரீ ஸர்வேச்வரனையும் திருப்தி செய்விக்கக்கூடியது. ஆஸ்திகர்கள் எல்லோரும் வந்து தரிசனம்செய்து அபிவிருதஸ்நானமும் செய்து ஸ்ரீ யக்ஞபுருஷனுடைய அனுக்ரஹத்திற்கு பாத்திரர்களாகும்படி கோருகிறேன்.

கர்மவிராம காலகளில் வித்வான்களுடைய உபன்யாஸங்கள் நடக்கும்.

அனந்தராம தீக்ஷிதர் ஜூ

## திருப்பறங்குன்றம்

### ஸாம வேதபாராயணம்

ஷை க்ஷேத்திரத்தில் நாளது பங்குனிமீ 1உ முதல் நடைபெறப்போகும் பிர்மோத்ஸவத்தில் எப்போதும் போல் ஸாம வேத பாராயணகோஷ்டி நடைபெறும் அதற்கான பிராம்மணஸமாராதனை முதலிய சிலவுகளுக்காக ஆஸ்திக பிரபுக்கள் திரவிய ஸகாயம் செய்து நடத்திவைக்கக் கோருவதாக ஸ்ரீமஹாலிங்கசிரௌதி முதலியவர்கள் எழுதுகிறார்கள்.

## குடந்தை ராமகிருஷ்ண வித்யாலயம்

### ஸ்ரீ சங்கரபாதாளின் விஜயம்

பிரமாதிஹூ மாசிமீ 13உ (26-2-40) காலை 9-30 மணிக்கு சோலையப்ப முதலியார் அக்கிரஹாரத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலய சங்கத்திற்கு விஜயம் செய்தார்கள், அது சமயம் ஷை நிர்வாகிகளும் ஸ்ரீ கே. ஆர். ரகுநாத ராவ் அவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் பூர்ண கும்பத்துடன் ஸ்ரீ ஆசார்யாளை வரவேற்றார்கள். பிறகு மிலட்டூர் ஸ்ரீ கே. ரெகுநாத சாஸ்திரிகள் அவர்கள் ஸ்ரீ ஆசார்யாளுக்கு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தார்கள். ஸ்ரீ ஆசார்யாள் வேத பாடசாலையும் பாஷ்ய பாடசாலையும் நடந்து வருவதைப் பற்றி ரொம்பவும் சந்தோஷப்பட்டும் மேன்மேலும் அபிவிருத்தி அடைய வேண்டுமென்றும் அனுக்ரஹித்தார்கள், அங்கு கூடியிருந்த பக்த கோடிகளுக்கும் பாஷ்ய பாடம் படிக்கிறவர்களுக்கும் வேதாத்யயனம் செய்கிற மாணவர்களுக்கும் பிரஸாதம் அருளி அனுக்ரஹித்தார்கள்.

ஷை பாடசாலைகள் பிரமாதிஹூ கார்த்திகைமீ ஸ்ரீ ஆசார்யாளின் ஸ்ரீமுகத்துடன் ஆரம்பிக்கப் பட்டு ஸ்ரீ கே, ரகுநாத சாஸ்திரிகள் அவர்களால் கீதை எட்டாவது அத்யாயம் நடத்தப்பட்டு ஸ்ரீ கே. ஸ்ரீனிவாஸகனபாடிகள் சொல்லிக் கொடுக்கிறார் எல்லோரும் விஜயம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

டி. வி. நாகராஜ சாஸ்திரி

## தர்மசாஸ்திரஸந்தேகம்.

இறந்துபோன ஒருவளுக்குஒரு ஸகோதரரும் தாயாதிக்காரர் ஒருவரும் ஒரு மருமானுமிருக்கிறார்கள்! தாயாதிகாரன் அடையக்கூடாதென்கிற எண்ணத்தினால் சொத்தைக் ஸகோதரனுக்கு எழுதிவைத்து விட்டாள். ஸகோதரருக்கு அந்த சொத்து சிலவழிந்து விட்டது. அவள் இறந்து 7மாதமாகிறது அவளுக்கு மருமான் கிரியை செய்யவேண்டியதென்று சிலரும் தாயாதிக்காரன் செய்யவேண்டியதென்று சிலரும் ஸகோதரர் தான் செய்யவேண்டியதென்று சிலரும் சொல்லுகிறார்கள் இன்னும் ஒருவரும் கிரியைகள் செய்யவில்லை யார் கர்தா வென்பதை ஆஸ்திகர்கள் தக்க ஆதாரத்துடன் ஆர்யதர்மம் மூலமாக தெரிவிக்கும்படி கேட்டுக கொள்ளுகிறேன்.

பி. எஸ். அனந்தராமன்

## மூத்ராதிராதிகாரி ஸன்னது வழங்கல்

கும்பகோணம் ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீசங்கரபகவத்பாதாள் சென்ற 26—2—40 சோலையப்பமுதலியார் அக்ரஹாரத்துக்கு விஜயமாகி சிஷ்யகோடிகளான மஹா ஜனங்களின் அபிப்பிராயத்தின் பேரில் எனக்கு ஸ்ரீமுத்திராதிகாரி ஸன்னதும் அதுகளின் சின்னங்களையும் மந்திராக்ஷதை முதலான பிரஸாதங்களுடன் கொடுத்து அனுகிரஹத்தார்கள்.

அவாள் ஆக்ஞையை சிரஸால் வகித்து ஆக்ஞை பிரகாரம் அஷ்டமி யன்று யாவருக்கும் பசுவின் நெய் ஏகாதசியன்று கொடுக்கும்படி சொல்லி வந்ததும் ஸ்ரீவிஸ்வநாதஸ்வாமி கோவிலில் புல் செடிகளை ஏகாதசி யன்று எடுத்து சுத்தம் செய்யப்பட்டது.

ஷை தெரு ஸ்ரீவிசாலாக்ஷி அம்மன் கோவிலில் 4-3-40 ஏகாதேசியன்று ஆக்ஞாபிரகாரம் மன்னார்குடி ஸ்ரீ வேம்பு சாஸ்திரிகள் அவர்கள் மாலை 4மணி முதல் 6-30 வரையில் துர்வாஸ பிக்ஷை என்னும் சரித்திரத்தை அதி பக்தியாகவும் உபன்யஸித்தார்கள். அது சமயம் விக்கிரபண்டியம் ஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்கள் விஜயமாகியும் மேலக்காவேரி மேட்டுத்தெரு மேலய்யன் தெரு டபீர் தெரு இதுகளில் இருந்து அநேக பக்தர்கள் ஸ்திரீகள் புருஷர்கள் சுமார் 300 பேர்கள் வரையில் விஜயமாகி கதாசிரவணம் செய்தார்கள். கதை முடிவில் ஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்களும் பக்தி என்பதை பற்றி சிலவார்த்தைகள் சொல்லி பிறகு ரிடயர்ட்டு மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீ அய்யாதுரை அய்யர் அவர்கள் வந்தனோபசாரம் சொல்லிஅடுத்த ஏகாதசி அன்று விக்கிரபாண்டியம் ஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அவர்கள் உபன்யாஸிக்க வேணு மென்று பிரார்திக்து அதற்கும் சாஸ்திரிகள் அவர்களும் அக்குரூரர் ஆகமனம் என்ற சரித்திரத்தை உபன்யாஸிப்பதாகவும் ஒப்புக்கொண்டு சந்தனம் பழம் சுண்டல் வினியோகம் செய்து கூட்டம் கலைந்தது.

4-3-40 ஏகாதசியன்று பக்தர்களால் கொடுக்கப் பட்ட பசுவின் நெய் சுமார் 2¾சேரையும் 5உ ஸ்ரீமடத்தில் கொண்டு போய் சேர்பிக்கப் பட்டது. அடுத்த ஏகாதசியன்று ஷை அக்கிரஹாரம் ஸ்ரீவிசாலாக்ஷி அம்மன் கோவிலில் நடத்தும் ஸ்ரீ கோபால சாஸ்திரிகள் அக்குரூர் ஆகமனம் என்னும் சரித்திரத்தையாவரும் வந்து கதாசிரவணம் செய்யும்படி பிராத்திக்கிறேன்.

சா. சுப்ரமணிய அய்யர்.


ஸ்ரீN. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ நாகர விமர்சனம். | 0 | 12 | 0 |
| ஸ்ரீ குரு விமர்சனம் | 0 | 5 | 0 |
| வரிவஸ்யா ரஹஸ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீ லலிதாத்ரிசதீ பாஷ்யம் | 1 | 0 | 0 |
| ஸ்ரீ வித்யா ஸபர்யா பத்ததி | 2 | 0 | 0 |

கிடைக்குமிடம் :— ஜனாத்தன அச்சுக்கூடம், கும்பகோணம்

ஸர்வே ஜனா:! ஸுகினோ பவந்து! சகல ஜனங்களும் சுகமடையட்டும்!

**ஸர்வஹித ஸாஹித்ய மண்டலம்,**

**திருச்சினாப்பள்ளி**

9, தண்ணீர்ப்பந்தல் ஸ்டோர், தெப்பக்குளம் போஸ்டு.

**வரன்கள் வேண்டுமா ?**

பெண்ணின் ஜாதி (உட்பிரிவுகளுடன்), கோத்திரம், ஜாதகம், படிப்பு, பந்துக்கள், வேண்டிய வரனின் யோக்யதை முதலிய விவரங்களும், தெரிந்த எல்லாப் பையன்களுடைய விவரங்களும் எழுதியனுப்பினால், புதிய பையன்கள் விலாசங்கள் அனுப்பப்படும்.

மண்டலத்திற் சேர்ந்தவர் பெண் பெயர் ஒன்று பதிவு செய்ய அணா 2.
ஆர்யதர்மம் சந்தாதார் „ 4.
மற்றவர் „ 8.

**தார்மிக வித்யா ஸங்கங்கள் ஏற்படுத்துங்கள்**

நன்மைகள் பல. 8—2—40 ஆர்யதர்மம் பார்க்க!

**வியாசப்போட்டி தேதி ஒத்திவைக்கப்பட்டது.**

**சிவலிங்காஷ்டகம்! இனும்!! இனும்!!!**

(தபாற் தலையனுப்புங்கள்.)

விழிமின்! எழுமின் !! மூந்துமின் !!!

## நமது மதம்

### நாம் செய்யவேண்டியதென்ன?

இனி நாம்செய்ய வேண்டிய தென்ன?
அறிவை விபரீதமாகச் செய்யும் நாவல்
களையும், மததூஷணையுள்ள பத்திரிகைகளை
யும். விநோத, வேடிக்கைப் பத்திரிகைகளை
யுமே, படிப்பதினால் மூளை கேட்டுப் போ
வதோடு யாதொருபிரயோஜனமும் கிடை
யாது, ரோம் நகரம்தீப்பற்றி எரிகிறபோது
அவ்வூரரசன் பிடில்வாசித்துக் கொண்டி
ருந்ததாகச் சொல்லுவார்கள். அதுபோல்
நம் தேசத்தில், மேற்கூறியபடி பல கொடி
யதுன்பங்களாகிற தீப்பற்றி எரிகிறபோது,
இப்பேர்பட்ட மத தூஷணையாய் எழுது
கின்ற பத்திரிகைப் படிப்பதனால் புத்திக்கு
விகல்பங்களேற்பட்டுக் கோண்டேயிருக்
கும்.

இனியாவது, பாரத ராமாயணாதிகளை
ப்படிக்கவேண்டும், கேழ்கவேண்டும், நித்
யகர்மானுஷ்டானம் வேதாத்யயனம் செய்
ய வேண்டும். வேதார்த்தங்களை பெரியோர்
மூலமாய்க் கேட்டுத் தெரிந்து கொள்ளல்
வேண்டும், இவைகளை அறியாம்லே சிலர்
கெட்டுவிட்டனர் என்று ஆரம்பத்திலே
யே, சூசனை செய்யப்பட்டிருந்தது, ஸத்யம்,
தர்மம், நியாயம் இவைகளை அனுஷ்டான
முறையில், நடந்துகொள்ள வேண்டும்,
வர்ணாஸ்ரம தர்மங்களைப் போதிக் கின்ற
க்ரந்தங்களையும், பத்திரிக்கைகளையும் அவசி
யம் படித்து தெரிந்து கொள்ள வேண்
டும். அங்கங்கே ஸநாதன தர்மப்ரசாரம்
செய்ய வேண்டும். ஸ்திரீகளும்; தற்கால
மேல்நாட்டு நாகரீக நடையுடை பாவனை
களைத்தடுத்து தங்கள் தங்கள் குழைந்தை
களுக்கு ஸ்வதர்மங்களை அடிக்கடி போதி
த்து வேதமார்க்கத்தி லீடுபடச் செய்ய
வேண்டும்.

ஸநாதனதர்மிகள் இனிமேலும் மெத்
தனமாய் தூங்கிக்கொண்டும் வீட்டுக்குள்
ளேயே பேசிக்கொண்டிருப்பதும் ஸரியல்ல
எப்போது நம் தேசத்தில் தேசீய காங்கி
ரஸ் மஹாஸபையென்று ஆரம்பித்ததோ அப்
போதே அத்துடன், வர்ணாஸ்ரமஸ்வாராஜ்ய
ஸங்கமும், அதற்கு அங்கமாக கிளம்பியிரு
க்கவேண்டிய தவசியம். காங்கிரஸ் என்ற
ரதத்தை மேடுபள்ளங்களில் போகாதபடி
மதங்கெடாத வழியில் சரியான முட்டுக்
கட்டைகளால், நிலைக்குவரும்படி செய்தி
ருக்கவேண்டியது. அப்போதைக்கப்போது
ஸநாதனமகாநாடுகள் கூட்டியும், ஸ்வ ஸ்வ
தர்மங்களை அனுஷ்டானமுறையில் காட்டி
யும், நம்முள் காமக்ரோதாதிகளைவாட்டியும்,
ஸநாதனசாரணப் படைஸங்கத்தை நாட்டி
யும், தர்மந்யாயமானமுறையில், நாமெல்லா
ரும், ஒற்றுமையாயிருந்து ப்ரபலஸ்திதிக்கு
கொண்டுவரவேண்டியது முக்கிய கடமை
யாகும்.

கடவுள் எங்கும் இருக்கிறார் என்றாலும்
தீண்டத்தகாதார்களின் ஆலயப்ரவேசத்
தால் ஸாந்நித்யம் கெட்டுவிடும். ஸாந்நித்ய
மென்பது, வேதரஹஸ்யம். அவ்விஷயத்தை
மற்றொருஸந்தர்பத்தில் ஆதாரதிருஷ்டாந்த
பூர்வகமாய் விளக்குவோம்.

வர்ணாஸ்ரமதர்மப்படி இவ்வுலகவாழ்வில்
தர்மந்யாயமான உயர்வு, தாழ்வுகள், அதா
வது பிதா புத்ரன், அண்ணன் தம்பிகள்,
மாமன மருமகன், குரு, சிஷ்யன், பிரம்ம
க்ஷத்ரிய, வைசிய, சூத்ரர்க்ள், படித்தவர்
படியாதவர், பெரியோர்சிறியோர், தர்மநியா
யங்களை அடிப்படையாகக்கொண்ட உய
ர்வு தாழ்வுகள், தர்மநியாயங்களின் அலக்ஷ்
யபுத்தியினால் சிதறப்பட்டாலும், பணத்தா
லும் அதிகாரத்தாலும் ஏற்பட்ட இவ்விர
ண்டு விதமான உயர்வு தாழ்வுகள் மாத்திரம்
மீதியாக நிற்கும், அப்பணமும் அதிகாரமும்
மின்னல்போல் நிலையுள்ளதல்ல,பணமும்
அதிகாரமும் மறைந்தால் உயர்ந்தவன் தாழ்
ந்தவனாகிவிடுவான். தாழ்ந்தவன் உயர்ந்தவ
னாகிவிடமாட்டான் தர்மநியாயங்களால் ஏற்
பட்ட உயர்வு தாழ்வுகளாலோ மேல் மே
லும் உயர்வேதவிர எந்நாளும் தாழ்ந்தவனாக
மாட்டான். தாழ்ந்தவன் உயர்ந்தவனாகிக்
கொண்டே வருவான். ஏனென்றால்; தர்ம
மும் நியாயமுமே துணையாக இருந்து உய
ர்ந்த நிலைக்கு கொண்டுவந்து விடும். ஆகவே
இம்மரியாதையை மீறினால் அனர்த்தங்கள்
தான். இவ்விஷயம் யாவரும்ஊஹிக்க
வேண்டிய விஷயம்.

ஸஸ்யானி ஸ்வயமத்தி சேத் வஸுமதீ,
என்றபடி பூமியானது பயிர்களுக்கு ஆதார
மாயிருந்து காக்கவேண்டியதிருக்க, அந்த
பூமியே பயிர்களை அழிக்குமானால் அதையா
ரால் தடுக்கமுடியும்? (பூமியானது சிற்சில
ஸமயங்களில் ஸாரங் கெட்டு பயிரை வளர
வொட்டாமல் அழித்துவிடுவதுண்டு)
இந்த விஷயத்தைத்தான் வேலியே பயிரை
அழித்து விடுமானால். யார்தடுப்பது என்று
அனுபவபழமொழி.கூறுகிறது(மாதாஸுதம்
ஹந்திசேத்) தாயானவள் குழந்தையை ரக்ஷி
க்கவேண்டியிருக்க அந்த தாயே குழந்தைக்
கொல்லுவாளானால் அதையார் தடுக்கமுடி
யும்? (வேலாமம்புநிதிர் விலங்கயதிசேத்)ஸமு
த்ரமே கரையைத்தாண்டிவந்து விட்டால்
அதைத் தடுப்பது யார்? (பூமிம் தஹேத்
பாவக:) அக்னியே, பூமியை, பிளந்து எரிக்
குமானல், யார்தடுப்பது? (ஆகாசம் ஜனமஸ்
தகே பததிசேத்) ஆகாசம் அதாவது ஆகா
யத்திலுள்ள இடிமேகம் சுழல் காற்று
முதலானவைகள் ஜனங்களின் தலையில்
விழுந்து விட்டால் அதை யார் தடுப்பது?
(அன்னம் விஷஞ் சேத் பவேத்) அன்னமா
னது ஜீவாதாரமாயிருக்க வேண்டியிருக்க
அதுவே விஷமாக ஆய்விட்டால் யார்
தடுப்பது?

(அந்யாயம் குருதேயதா க்ஷிதிபதி:
கஸ்தம் நிரோத்தும்க்ஷம:) அரசனானவன்
ப்ரஜைகளை அவாரவர் தர்மத்தினின்று தவ
றுகாமல் பரிபாலிக்க வேண்டியகடமையிரு
க்க, அவ்வரசனே தர்மந்யாய விருத்த
மான கார்யங்களைச் செய்தால் அதையா
ரால் தடுக்கமுடியும்? ஈஸ்வரன்தான் தடுக்க
வேண்டும் என்று பெரியோர்கள் கூறியி
ருக்கின்றனர்.

ஆகையால் எவ்வகுப்பினருக்கும் யாதொ
ருகெடுதியில்லாமலும். வகுப்புத் வேஷங்கள்
ஏற்படாதபடிக்கும் எல்லாருடைய க்ஷேம
த்துக்கும் வழிதேடவேண்டியது அரசாங்
கத்தின் முக்கியகடமையாகும்.

சுப்ரமண் அய்யர்
வீணை வித்வான்.

---

### பஞ்சாக்ஷர அகவல்
### ஷடாக்ஷர அகவல்

அகத்திய மகா முனிவர் அருளிச்செய்த
இவைகள் குருபதேச முறைப்படி பரி
சோதித்து சுத்தப்பதிப்பாக பட்டீச்சுரம்
ரேடிவ் டாக்டர் ஸ்ரீமான் எம். கே. ஸாது
ஸ்ரீ இராமஸ்வாமி சர்மா அவர்களால் பதிப்
பிக்கப் பெற்றன. விலை அணா 4.

கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக்
கூடம், லிமிடெட், கும்பகோணம்.

---

### கீர்வாணவாணீ பரிஷத்
பழுவூர்.

சென்ற 4—2—40 ஞாயிறு பகல் 12½மணி
க்கு முத்தரசனல்லூர் பர்ணகுடீரத்தில்
மேலே கண்ட பரிஷத்தின் கூட்டம் நடை
பெற்றது. அவ்வமயம் வரகூர் ஸ்ரீ. பாஷ்ய
பாவக்ஞ. ஸ்மிருதிபூஷண வி.எஸ் வெங்கிட்
டராம சாஸ்திரிகள் அவர்கள் தலைமை ஸ்தா
னத்தை வகித்து ஆஸ்திக்யம் என்ற விஷய
மாக விஸ்தாரமாக எளிய நடையில் நன்கு
உபன்யஸித்தார்கள். பிறகு அதே இடத்தில்
17—2—40 சனிக்கிழமை மாலை6மணிக்கு
திருச்சி தெய்வநெறிக்கழகம் அத்யக்ஷர்.ஸ்ரீ.
சிவராம கிருஷ்ணய்யர் அவகள் யோகா
ஸனங்களின் உபயோகத்தைப் பற்றி விஸ்
தாரமாக உபன்யஸித்து பிறகு ஸபையோர்
முன்னிலையில் சுமார் 20ஆஸனங்களை நேரில்
போட்டுக் காண்பித்து ஸபையோர்களை பர
வசப்படுத்தினார்கள். பிறகு 25—2—40
ஞாயிறு மாலை4மணிக்கு பழுவூர் வேதபா
டசாலையில் அல்லூர் ஸ்ரீ தாண்டவேசுவர
கனபாடிகள் அவர்கள் பிர்ம்மயக்ஞம் என்
னும் விஷயம் பற்றி சுருதிஸ்மிருதி இதிஹா
ஸவசனங்களால் ததும்பிய சொற்பொழிவு
நிகழ்தினார்கள் கார்யதர்சியில் வந்தனோப
சாரம்கூறப்பட்டு ஸபை இனிது கலைந்தது

எஸ். வி. சுப்ரமணியசாஸ்திரிகள்

---

## மதிப்புரை

### கும்ப பால்குனஸங்க்ராந்தி விரத கல்பம்

இப்பெயர் கொண்ட இச்சிறுநூல் நல்லிச்
சேரி அருணாசல சாஸ்திரிகள் குமாரர்
ஜம்புநாத சாஸ்திரிகளால் அச்சிட்டு வெளி
யிட பட்டது. மாசி மாதத்தின் முடிவும்,
பங்குனி மாதத்தின் ஆரம்பமும் சேரக்கூ
டிய காலத்திற்கு கும்பபால்குனயஸங்கிராந்தி
எனப் பெயர். அக்காலத்தில் ஸுமங்கலி
கள் அனுஷ்டிக்க வேண்டிய விருதத்திற்கு
ஸௌமங்கல்ய விரத மென்பது பெயர்
ஒவ்வொரு ஸுமங்கலிகளான ஸ்திரிகள்
பக்தியுடன் இந்த விரதத்தை செய்தால் தான்
தாங்கள் தீர்கமாக, ஸௌமங்கல்யம்,
தீர்க்கமான புத்திரபௌத்ராதிசந்தானங்கள்
தங்களது நாயகருக்கு தீர்காயுள் முதலான
சகல க்ஷேமத்தையும் அடைவார்கள். பால்
குனசங்கராந்திகாலத்தில் மங்களஸ்நானம்
நாம் செய்து நியமத்துடன் எல்லாக்ஷேமத்
திற்கும் காரணமான பராசக்தியை பூஜிக்க
வேண்டும், பூஜாக்ரமங்கள் இச்சிறுநூலில்
எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது. பலச்ருதி
கள் தமிழிலும் எழுதப்பட்டிருக்கிறது.
பிவிஷ்யோத்தர புராணம் 17. வது அத்யா
யமான- மாங்கள்யவிருதம் என்ற அத்யாயம்
33. ச்லோகங்களும் கிரந்தலிபியில் அழகாக
பிழையில்லாமல் விளங்குகிறது, இச்சிறு
நூலை ஒவ்வொருவரும் வாங்கி பராசக்தியை
பூஜித்துச்ரேயஸ்ஸையை அடையவேண்டு
கிறோம், இதன் விலை அணா (0—1—0)தபால்
சிலவு தனி. வேண்டியவர்கள் ஜம்புநாத
சாஸ்திரி. நல்லிச்சேரி, அய்யம் பேட்டை.
அல்லது, ஆர்யதர்மம் ஆபீஸ், கும்பகோணம்
என்ற இடத்திலும் பெறலாம்

கே. ஆர். வைத்தினாத சாஸ்திரி.

---

### ஸ்ரீ மஹாபாரதச்சுருக்கம் ஆதிபர்வம்

ஸ்ரீமான் சேங்காலிபுரம் பஞ்சாபகேசய்யர்
அவர்களால் எழுதப்பட்டது.

விலை அணா 0 8 0

கிடைக்குமிடம் :— ஜனார்த்தன அச்சுக்கூடம்,
கும்பகோணம

# ஸ்ரீ ராமரது பாட்டன் (அஜன்) ராஜ்யம்

## மஹாஸ்காந்தம்

### ஓர் கதை

சென்னை ஸ்ரீ சங்கர மடத்தில் பிரும்மஸ்ரீ ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா அவர்கள் கூறி வரும் ஸ்ரீ மஹாஸ்காந்த நாகர கண்டத்தில் கூறப்பட்ட இவ்வரிய கதையைப் பலருக்கும் பயன்படுமாறு சுருக்கி நமது ஆர்யதர்மத்தில் 3 பாகமாக வெளியிடுகிறேன்.

ஸூர்யனது மறையில் தோன்றியது ராமனது வம்சம் என்பது எல்லோருமுணர்ந்ததல்லவா? அதில் அஜனென்றோர் வேந்தனிருந்தான். இச்சொல் ஆட்டையுங்குறிக்கும் சதுர்முகனையுங் குறிக்கும். பிறப்பு இறப்பு இல்லாத பரமனையுங் குறிக்கும். நற்பெயரை வைப்பது நம் நாட்டு நாகரீகமல்லவா? நமக்கு" உட்'' க்ரீன்'' பார்ட்டி'' ஸ்கின்'' கட்டை'' பச்சை'' நாற்பது'' தோல்'' இது போன்ற நாமங்கள் சூட்டிக் கொள்ளப் பிடிக்காது. ஆனால் அன்னவரத ஸஹவாஸத்தால் அப்படி பெயரிட்டுக்கொள்ள துணியாது, உள்ள பெயரை ஒருவகையாக 'ஜகதீசன்' "ஜிடைசன்'' என்றும் 'பரமேச்வரன்' "பி, வாரன்'' என்றும்—அழகு படுத்திக் கொள்பவரை நாம் மறக்க முடியுமா?

அஜன் சிங்காஸன மேறினன். ஏனைய மன்னர்களை விட எந்த சிறந்த வகையில் தனது குடிகளுக்குப் பேருதவி புரியலாம்? என்று இரவும் பகலும் சிந்தை கொள்வான் அமாத்யர்கள் கூறிய, அரசாங்கக் கட்டணத்தைச் சிறிது குறைப்பது, எளியவரிடம் வரி வாங்காமலே இருப்பதென்ற யோசனைகள் மன்னன் மனதிற்கு மகிழ்ச்சியை யளிக்கவில்லை. மறுபடியும் ஆழ்ந்து யோசித்தான். எவரிடமும் வரி வாங்குவதில்லை என்ற முடிவிற்கு வந்தான்.

அதை நிறைவேற்றுவதில் அவனுக்குச் சில கஷ்டங்கள் குறுக்கிட்டன. ராஜாயத்த ஸித்தி, அரசனே ஆள்வது. ஸசிவாயத்த ஸித்தி, மந்திரிகளே ஆள்வது. அரசன் ஒப்பிற்கிருப்பது; உபயாயத்தஸித்தி, மந்திரியும் மன்னனும் சேர்ந்தாளுவது என்ற மும்முறைகளில் கடைசிமுறையில் நடப்பது அஜனது அரசாட்சி. அம்ச்சர்களோ வரி வாங்காவிடில் அரசாட்சி நடப்பதெங்ஙனம்? ஊழியர்களுக்கு ஊதியம் எங்ஙனமளிப்பது? பகைவர் படை எடுத்தால் என்செய்வது? பஞ்சம் தோன்றினால் என் செய்வோம் என ஏங்கினர்.

அரசே முடிவான அதிகாரி. அவனுடையமந்திரிகள் மீறமாட்டார்கள் என்றும் அவர்கள் ஆக்ஷேபங்களை அஜன் புறக்கணிக்கவில்லை. தன் வசமுள்ள செல்வங்களைக் கொண்டு மிக அவசியமான அரசியல் செலவைச் செய்து தான் தவசிகள் போல் எளிய வாழ்வு நடத்துவதாகக் கூறினன். குடிகள் குறையின்றி வாழும் படி செய்வதே ஓர் புனிதமான கடமை அல்லது தர்மம் என்று எண்ணிய மந்திரிகள் தன் ஊதியத்திற்கு குறைவு வருமோ என்று வருந்தவில்லை!

அரசனது த்யாகத்தையும் உதாரநோக்கத்தையுங்கண்டு மகிழ்ந்தனர்: ஆயினும். குடிகளிடம் வரி வாங்கி அதை அவர்களுக்கே பன்மடங்காக ப்பயன்படுத்துவது மிகச் சிறந்த பண்டையகாலத்து தர்மமும் பழக்கமுமான மார்க்கமாதலின் அதை விட்டுவிட அவர்கள் விரும்பவில்லை. பண்டைய முறை என்பது மட்டிலுமல்ல. அரசன் பொருளைக் கொண்டு எத்தனைகாலம் அரசாங்கம் நடத்த முடியும்? ருசிகாட்டிய பின் மக்கள் மறுபடி வரி கொடுப்பார்களா? இதை நீடித்து இவ்வரசஸந்ததி நடத்த முடியுமா? என பற்பல கேள்விகள் அவர்களுள்ளத்திலே எழுந்தன.

அஜனும் இவைகளை அறியாதவனல்ல! ஆனல் அவன் வேறொரு அரியவழியை மனதிலே மறைத்துவைத்திருந்தான், அது ஸித்தியான பின் மந்திரிகளிடம் வெளியிடலா மென்பது அவன் உள்ளம் போலும் ஒரே சொல்லில், வேண்டிய அளவு தான் தனம் தேடித்தருவதாக கூறினன். அடுத்த நாள் காலை இனி அரசாங்கத்திற்கு வரி கட்ட வேண்டியதில்லை என்று அரசனுணை விதி விதியாக பறைசாற்றப் பட்டது, இதைக் கேட்டவர்களது மனம் எவ்வளவு ஆநந்தமடைந்திருக்கு மென்பதை நாம்தான் நன்கு உணரமுடியும். வேந்தனை வாழ்த்தாதவரிருப்பாரா?

அஜன் அரண்மனையில் வீற்று ஆநந்தத்தை அனுபவிக்கும் அரசனல்ல. முன்னிலும் பொறுப்பு அஜனுக்கு அதிகமல்லவா? மாறு வேடம் பூண்டு எளியவர் நிலையை நேரிலே காண்பான். வரியை நீக்கியும் விதியின் வலியால் வருமையுள்ள சிலரைக்கண்டான் எளிய வரைத் தேடித் தேடி வலுவிலே தன் பொருளைப் பங்கிட்டான். சுறுங்கச் சொல்லின் மனைவி இந்துமதி மைந்தன் தசரதன் இவ்விரண்டே எஞ்சி நின்ற பொருள்களாம். இவ்வளவு தந்தும் சிலர் நீங்காப் பிணியால்துன்புறக்கண்டான்.

அரசன் மனம் சாந்தி அடைய வில்லை. மனித சக்திக் கெட்டாமல் மறைவிலிருந்து ஓர்சக்தி அவரவர் வினைக்கேற்க இன்பதுன்பங்களை அளிப்பதைப் பார்த்தான். அதையும் ஸ்வாதீனப்படுத்த முயன்றான். இம்மை மறுமை இரண்டிற்கும் மந்திரியான வஸிஷ்டரை அடுத்தான். தன் குறைகளைக் கூறி முறையிட்டான். எல்லாமறிந்த வஸிஷ்டர் சிஷ்யனது சீலத்தைக் கண்டு அளவிலா மகிழ்ச்சி கொண்டார். குடிகளது குறைகளைத்தீர்க்காத ஓர்நிமிஷமும் அஜனுக்கு ஓர்யுகம் போலிருந்ததைக்கண்டார்.

சிஷ்யனுக் கேற்றகுரு அவர். விரைவில் அவனுள்ளங்குளிர ஓர் மந்தரத்தையுங் கூறி மிக மிகவிரைவில் மந்தரஸித்தியைத்தரும் க்ஷேத்ரத்தையுங் குறிப்பிட்டார். அதர்வ வேதத்திலுள்ள ஸ்ரீசண்டியின் மந்த்ரமது. உஜ்ஜயினியிலுள்ளஹாடகேச்வரமென்பது அந்த க்ஷேத்ரமாம், அஜன் அங்கு சென்று சண்டியைப்ரதிஷ்டை செய்து மூன்று வேளை மூழ்கி ப்ரம்மசர்ய நியமத்துடன் ஏகாக்ரசித்தனாக ஹ்ருதயகமலத்திலே அம்பிகையைத்யாகம் செய்தான்.

அங்கு இங்கு ஏருதபடி எங்கும் தங்கி நின்றாலும் அவரவர் பரிபாகத்திற் கேற்க புத்திசக்தியாயுள்ளத்திலே உள்ள அவ்வகப் பொருள், தன்னல மின்றி ஊருக்குழைக்கும் உத்தம புருஷனது உள்ளத்தை உணர்ந்து களித்து எதிரிலே தோன்றிற்று.

தேவர்கள் கோரும் உத்தம குணங்கள் தன்னலத்யாகம், பரோபகாரம் மாசற்ற மனம் இவைகள் தானே.

உதாரகுணம். உத்தமகுரு, ஒப்பற்ற மந்த்ரம் நிகரில்லாத க்ஷேத்ரம், இவ்வளவு மொன்று கூட தேவி கன்றைத் தேடிவரும் பசு போல் பரிந்து வாராமலிருப்பளோ? வத்ஸ! முனிவர்களாலும் முடியாத தவம் செய்து என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாய்! தேவருக்கும் மூவருக்கும் கிட்டாத வரனைக் கேள். உனக்குக் கொடுகத்தகாத வரமொன்றுமில்லை! என்று தேவி சண்டி கூறினன்

(தொடரும்) ஸ்ரீபாலா.

# திருச்சி ஆயுர்வேத ஸபை

திருச்சி ஆயுர்வேதசபை அங்கத்தினர் 29—2—40 மாலை4மணிக்கு நெ.10 சின்ன கடைத்தெருவில் கூடினர்கள். அச்சமயம் வைத்திய விசாரத, ஆயுர்வேத சிரோமணி எல். வி. மகாதேவசர்மா அவர்கள் அக்கிராசனம் வகித்தார். டி. என். வெங்கடேசசர்மா (ஆயுர்வேத சிரோமணி வைத்திய விசாரத) அவர்கள் பிரவாஹிகா என்ற கொடிய நோயைப்பற்றி கீர்வாண பாஷையில் ஒரு வியாசம் படித்தார். இதை "டிசன்டிரி'' என்று ஆங்கில வைத்தியர்கள் அழைப்பார்கள் என்றும் இதில் வாதம் பித்தம், கபம், ரக்தம் ஆகிய 4வித பிரவாகிஹா உண்டு என்று கூறி எல்லாவற்றிற்கும் மித்யாஹார விகாரத்தால் ஏற்படும் அக்னி மாந்தியமும், கோஷ்டவிரணமும் பித்தம் கெடுதலுமே காரணம் என்றும் கூறி அதற்குச் சிறந்த ஔஷதங்கள் சிகித்ஸைகளையும் எடுத்துக் கூறினர். கூட்டத்தில் வந்துள்ள பல வைத்தியர்களும் சர்ச்சையில் கலந்து கொண்டார்கள். வமனகர்மாவும் இச்சிகித்ஸையில் நல்ல பலன் அளிக்கவல்லது என்று யாவரும் அபிப்பிராயப் பட்டார்கள்.

கூட்டம் கலையும்போது ஸ்ரீமான் டி. ஏ. லக்ஷ்மிபதி பி. ஏ. எம். பி. எஸ். அவர்களுக்கு 29—2—40 ல் 61வயது முடிவு பெறுவதால் அன்னருக்கு கடவுள் தீர்க்காயுள் கொடுத்து, மேன்மேலும் ஆயுர்வேத அபிவிருத்திக்கு அவர் உழைத்து ஆயுர்வேதத்தையும், ஆயுர்வேத வைத்தியர்களின் நிலைமையையும் பெருமைப் படுத்தவேண்டும். என்றுபிரார்த்தனை செய்து அதை ஓர் தீர்மானமாகவும் நிறைவேறச்செய்தது. இச்சபையானது இந்த பேப்பர்வாயிலாக தங்களுடைய சந்தோஷத்தை லக்ஷ்மிபதி அவர்களுக்குத் தெரிவிக்கிறது. தாம்பூலம் பழம் வழங்கி மாலைமணிக்குச் சபை இனிது கலைந்தது. (க. கி.)

## தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,

தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை

## ஸ்ரீ ஸ்தவம்.

சிரோமணி ஸ்ரீநிவாஸராகவாசாரியார் எழுதியது மூலம் நாகரத்திலும் தமிழிலும் உரையுடன் விலை 0 4 0,

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்

Printed by S. Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.